# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.CC. 121/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | . தட்சணாமூர்த்தி |
| Father's Name | : | . மாணிக்கம் |
| Village | : | . மும்முனி |
| Taluk | : | . வந்தவாசி |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | . 66 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 22.08.2025.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 1ம் எதிரி தட்சிணாமூர்த்தி எனது மருமகன், 2, 3 எதிரிகள் எனது சம்மந்தி. 4ம் எதிரி 1ம் எதிரியின் தங்கை. எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் தனித்தனியே முதல் திருமணம் நடைபெற்று விவாகரத்து ஆகி, கடந்த 27.08.2015ம் தேதி பெரியோர்கள் நிச்சயத்த திருமணம் திருத்தனி முருகன் கோவிலில் நடைபெற்றது.

திருமணம் ஆன ஒரே மாதத்தில் எதிரிகள் தொல்லை செய்தார்கள். கட்டையால் அடித்தார்கள். எனது மகளின் இரண்டு கால்களையும் பிடித்து இழுத்து வெளியே தள்ளி அப்பாவிடம் சென்று பணம் வாங்கி வா என்று காலல் உதைத்தார்கள். இந்த சம்பவத்தை எனது மகள் சொல்லி தெரியும். ஒருமுறை நாங்கள் நேரில் சென்று பார்த்தபோது எங்கள் கண் முன்னே எதிரிகள் என் மகளை அடித்ததை நான் பார்த்தேன்.

இதேபோல நிறைய கொடுமைபடுத்தியுள்ளார். வேறு பெண்களுடன் தொடர்பு இருந்தது. இஷ்டம் இருந்தால் இரு இல்லையேல் போய்விடு என்று சொல்லிவிட்டார். 3ம் எதிரி, 1ம் எதிரியை தூண்டிவிட்டு பேசி வந்தார். தனக்கு பணம் வேண்டும் என்று கெட்ட வார்த்தையால் அசிங்க அசிங்கமாக பேசி எனது மகளை அனுப்பிவிடுவார். ஒவ்வொரு நாளும் இவ்வாறே எனது மகளுக்கு நடந்து வந்தது. 3ம் எதிரி, 1ம் எதிரியிடம் சொல்லி எனது மகளை அடிக்க வைத்தார்.

எனது மகளை அடித்து எனது வீட்டிற்கு அனுப்பிவிட்டு அங்கு செத்தால் பிரச்சனை வரும் அதனால் என் வீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள். எனது மகள் குழந்தை பிறந்தவுடன் எனது வீட்டிற்கு வந்துவிட்டார். எங்கள் வீட்டிற்கும் வந்து எதிரி எனது மகளை அடித்தார். பின்பு எனது மகள் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுவின்பேரில் ஒத்தி வைக்கப்பட்டது.